20th July 1962]

to the remaining married personnel of the force who are not provided with Government quarters, was considered but it had to be deferred.

திரு. ராம. அரங்கண்ணல்: திருமணம் ஆகாத எஸ். ஏ. பி. போலீஸ்காரர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திருமணம் ஆகாத போலீஸ் காரர்களுக்கு தங்குவதற்காக தனி அறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

புதிய பஸ் ரூட்டுகள்

*462 கேள்வி.—*திரு. மு. கருணாநிதி:* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள்களிலும் 1962-ம் ஆண்டு ஜனவரித் திங்களிலும் புதிதாக பஸ் ரூட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) வழங்கப்பட்டிருந்தால் எத்தனை?

(உ) யார் யாருக்கு? எங்கெங்கு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*c*) A statement[a] is placed on the table of the House.

ஆசிரியர்கள் (குடியிருப்பு)

*463 கேள்வி.—*திரு. கோ. சி. மணி:* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் பள்ளிகள் இருக்கும் ஊரிலேயே குடியிருக்கவேண்டுமென்ற விதி உள்ளதா?

(இ) அப்படியானல், அரசாங்கத்தால் ஆசிரியர்களுக்கு கட்டித் தரும் வீடுகள் இல்லாமலும் ஒரு மைல் சுற்றளவில் வாடகைக்கு வீடு கிடைக்காமலும் இருக்கின்ற ஊர்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு விதி தளர்த்தப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) Yes, Sir.

(இ) Yes Sir, in special cases. Each case will be considered on merits.

மோட்டார் தொழிலாளர்கள் சம்பளம்.

*464 கேள்வி.—*திரு ராம. அரங்கண்ணல் (திரு எம். எஸ். மணி சார்பாக):* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-ல் பப்ளிக் மோட்டார் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயம் செய்திருப்பது எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The minimum rates of wages for the employment in Public Motor Transport were not fixed in 1961 but were fixed in 1957 and 1959. These rates have since been revised and refixed and the revised rates have come into force on 1st July 1962.

---

[a] Printed as Appendix IV on pages 545–547